Crl.Misc.39

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II COURT, KARUR

CC No.865/2023

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW-5<br>Defence<br>Court |

| | | |
|---|---|---|
| Name | : | தங்கசாமி |
| Father's Name | : | செல்லையா |
| Village | : | தாந்தோன்றிமலை |
| Taluk | : | கரூர் |
| District | : | கரூர் |
| Age | : | 53 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of (44 of 1969) of the day of 17.06.2026

**எதிரி PT warrant மூலம் நேரில் ஆஜர் படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை**

1) நான் தற்போது சிந்தாமணிபட்டி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு வெள்ளியணை காவல் நிலையைத்தில் 27.09.2023ம் தேதி உதவி ஆய்வாளராக பணியிலிருந்த போது காலை 11.00 மணியளவில் கரூர் மாவட்டம் வெள்ளியணை வடக்கு மேட்டுபட்டியை சேர்ந்த பொம்மாநாயக்கன் மகன் சுப்பிரமணி என்பவர் நிலையம் ஆஜாகி கொடுத்த

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

எழுத்துப்பூர்வமான புகாரை பெற்று நிலைய குற்ற எண். 299/2023 ச/பி. 379 இதச படி வழக்கு பதிவு செய்தேன். **நான் பதிவு செய்த முதல் தகவ்ல அறிக்கை அ.சா.ஆ– 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அன்றைய தினம் மதியம் 12.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் பிரசாத் மற்றும் சுந்தரம் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ– 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2) தொடர்ந்து சாட்சிகளான சுப்பிரமணி, பிரசாந்த், சுந்தரம், பழனிசாமி, கருப்பையா ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினம் வழக்கின் எதிரியை பல இடங்களில் தேடியும் எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் அம்மன் நகர் பஸ் நிறுத்தம் அருகே நின்று கொண்டிருந்த எதிரியை கைதுக்கான காரணம் கூறி 17.00 மணிக்கு கைது செய்தேன். 17.15 மணிக்கு சாட்சிகள் சதீஸ்குமார் மற்றும் மணிவேல் ஆகியோர்கள் முன்னிலையில் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் பதிவுசெய்து பின் எதிரி மற்றும் சாட்சிகளுடன் எதிரி அடையாளம் காட்டிய சம்பவ இடத்தை பார்வையிட்டு எதிரியுடன் நிலையம் ஆஜரானேன். அன்றையதினம் எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். மேலும், இவ்வழக்கின் அனைத்து சாட்சிகளும் விசாரணை செய்து முடிக்கப்பட்டதால் 28.09.2023 ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

அ.சா.1 புகார் அளித்த தேதி 27.09.2023 ம் தேதி 11.00 மணிக்கு ஆனால் சம்பவம் நடைபெற்ற தேதி 26.09.2023 ம் தேதி இரவு 9.00 மணி ஆகும். ஆஜர் எதிரியை எங்கு வைத்து கைது செய்தேன் என்றால் அம்மன் நகர் பஸ் நிறுத்தம் அருகே கைது செய்தேன். நீதிமன்றத்திலிருந்து அம்மன் நகர் பஸ் நிறுத்தம் எவ்வளவு துாரம் என்றால் சுமார் 7 கி.மீ ஆகும். இருசக்கர வாகனத்தில் சென்றால் 15 நிமிடம் ஆகும். ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

2) எத்தனை மணி, எந்த தேதியில் கைது செய்தேன் என்றால் 27.09.2023 ம் தேதி மாலை 5.00 மணி ஆகும். 27.09.2023 ம் தேதி ஆஜர் எதிரி கரூர் மாவட்டம் குற்றவியல் நீதிமன்றம்.2 ல் ஆஜராகி வேறு வழக்கிற்கு கையொப்பம் செய்து வந்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சாட்சி பட்டியலாக போடப்பட்ட நபர்கள் அனைவரும் வெள்ளியணை காவல் நிலையத்தில் சாட்சியாக எப்போது இருப்பார்கள் என்றால் சரியல்ல. வெள்ளியணை காவல் நிலையம் குற்ற் எண். 85/2024 தற்போது இந்நீதிமன்றத்தில் சிசி 339/2024 இந்த வழக்கிலும் மேற்படி வழக்கில் உள்ள LW 5, 7, 8 சாட்சிகளை தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சம்பவ இடத்தில் சிசிவிடி பதிவு உள்ளதா என்றால் உள்ளது. அந்த பதிவை அ.சா.1 காவல் துறையிடம் ஒப்படைக்கவில்லை. ஆஜர் எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தில் 27.09.2023 ம் தேதி காலையில் வெள்ளியணை ரோட்டில் வந்த வழிப்போக்கர் ஒருவரிடம் ரூ- 200/-க்கு விற்று விட்டதாக வாக்குமூலம் பெற்றுள்ளது என்றால் சரிதான்.

3) எனது விசாரணையில் வழிப்போக்கர் யார் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அந்த வழிப்போக்கர் சம்மந்தமாக சிசிடிவி பதிவை நான் ஆய்வு செய்யவில்லை என்றால் சரிதான். எனது புலன் விசாரணையிலும் அந்த வழிப்போக்கர் யார் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் எதிரி சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், நான் கைது செய்யப்பட்ட சொன்ன நேரத்தில் இந்நீதிமன்றத்தில் கையொப்பம் செய்துள்ளார் என்றாலும், சாட்சியங்கள் அனைத்து ஏற்கனவே வெள்ளியணை காவல் நிலையத்தில் மற்ற வழக்கிற்கு பயன்படுத்தும் நபர்களை பொய் சாட்சியாக இவ்வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல.

4) ஆஜர் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும், குற்ற இறுதி அறிக்கையை சரிவர புலன்விசாரணை செய்யாமல் நீதிமன்றத்தில்

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

தாக்கல் செய்துளேன் என்றாலும், நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல.

இவ்வழக்கு சம்மந்தமாக இவ்வழக்கில் உண்மையான குற்றவாளியை ஆஜர் செய்ய இயலாத காரணத்தினால் எதிரி மீது பொய்யான சாட்சிகள் தயார் செய்து நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/−எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**